

# தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்



தொகுப்பாசிரியர்

ப.பிரதாப்



காலத்திற் கேற்ற வகைகள் அவ்வக்
காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞால முழுமைக்கும் ஒன்றாய் எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்று மில்லை

சுப்பிரமணிய பாரதியார்

ISBN 819379638-1
9788193796382

தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்
(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை)

தொகுப்பாசிரியர்
ப. பிரதாப்

உரிமை
ஆசிரியருக்கே

முதற்பதிப்பு
அக்டோபர், 2019

வெளியீடு
தமிழ்த்துறை, என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி

வடிவமைப்பு, அச்சு
பாலகீதா மீடியா, பொள்ளாச்சி, 99761 44451

பக்கங்கள் : 18 + 398 = 416

விலை: ரூ. 450/-

ISBN : ISBN 819379638-1
9788193796382

# 9. தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்

**மகேஸ்வரி,**
ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, என்.ஜி.எம் கல்லூரி,
பொள்ளாச்சி 642001.

## முன்னுரை

"இலக்கியம்" என்பது காலத்தின் கண்ணாடி என்பர். ஓர் இலக்கியம் தான் எழுதப்பட்ட காலம் எதுவோ அக்காலத்தின் போக்கை முழுமையாக உணர்த்தும்போதே அஃது முழுமையான தலைசிறந்த இலக்கியமாகும். அக்கால சமய பண்பாட்டு நிலைகளை பாத்திரங்கள் மூலமாகவோ வர்ணனைகள் மூலமாகவோ முழுமையாக சித்தரிக்கும் ஆசிரியனே "சிறந்த இலக்கிய படைப்பாளன்" என்ற தகுதியுடையவன். அவன் படைக்கும் இலக்கியங்களே உயர்ந்தனவாக விளங்குகின்றன. அவ்வகையில் சங்கஇலக்கியங்கள் சிறந்தனவாக விளங்குகின்றன. சமூகச் சூழலை சிறப்பாக வெளிப்படுத்துகிறது.

## சங்க இலக்கியங்கள்

சங்ககாலத்தில் தோன்றிய இலக்கியங்கள் பனையோலைகளில் எழுதப்பட்டன. ஆதலால் அவற்றில் பல காலப்போக்கில் அழிந்துபோயின. கடல்கோள்களாலும் பிற காரணங்களாலும் சங்கநூல்கள் பலவும் அழிந்தன. அழிந்தது போக மீதமுள்ள நூல்களே பத்துப்பாட்டு, எட்டுத்தொகை. சங்கநூல்கள் அனைத்தும் கி.பி. முதல் மூன்று நூற்றாண்டுகளை சார்ந்தவை. ஆதலால் அம்மூன்று நூற்றாண்டுகளிலும் நிலவிய அரசியல் மக்கள் வாழ்க்கை பயிர்த்தொழில் சமயம் நாகரீகம் பண்பாடு போன்றவற்றை அறிய முடிகிறது.

## சங்கத் தமிழரின் வாழ்வியல் சூழல்:

சங்ககாலத்தில் தமிழர்கள் இயற்கையோடு ஒத்து வாழ்ந்தார்கள். சங்க இலக்கியங்கள் எல்லாம் இயற்கையின் கடவுள் என போற்றும் வழக்கமே தமிழர்களின் முதல் தெய்வ

வணக்கமாகும். சங்க கால மக்கள் இயற்கை சூழ்நிலையை பேணிப் பாதுகாத்து வளர்த்தார்கள் சங்க கால மக்கள் இயற்கையை ஐந்து நிலைகளாக கண்டார்கள்.

"நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம்"

என தொல்காப்பியர் வரையறுத்துக் கூறியுள்ளார். இதன் அடிப்படையில் சங்க கால மக்கள் இயற்கையை போற்றி வணங்கியதோடு அவற்றோடு இணைந்து பெருவாழ்வு வாழ்ந்தனர் என்பதை அறிய முடிகிறது.

**சங்கம் மருவிய காலம்**

சங்ககாலத்திற்கு அடுத்து வந்த காலப் பகுதியில் அறவழி கூறும் நூல்கள் மிகுதியாக வெளிவந்தன. எனவே இக்காலம் நீதிநூல்காலம் எனப்படுகிறது. இந்நூல்களில் போதிக்கப்படும் நீதி பெரும்பாலும் சமயசார்பற்றவையாகக் கருதப்படுகிறது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் நாலடியார் முதற்கொண்டு கைந்நிலை ஈறாக உள்ள பதினெட்டு நூல்கள் இத்தொகுப்பில் உலகபொதுமறை என்று போற்றப்படும் திருக்குறள் அடக்கம். சிலப்பதிகாரம் மணிமேகலை எனும் இரட்டைக் காப்பியங்கள் இயற்றப்பட்டதும் இக்காலத்தில் தான்.

**தற்கால இலக்கியம்**

18-ம் 19-ம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் தமிழ்நாட்டில் அரசியல், மதம், கல்வி போன்ற தளங்களில் பலவிதமான மாற்றங்கள் இடம்பெற்றன. சைவ மடங்களின் ஆதரவாலும் சில புலவர் பரம்பரையினரின் முற்சியாலும் தமிழ் இலக்கிய செல்வங்கள் விழுமியங்கள் அழிவுறுவது காலத்தால் தடுக்கப்பட்டது. அந்நிய ஆட்சியாலும் ஆங்கில மொழியின் செல்வாக்காலும் நலிவடைந்து கிடந்த தமிழ்மொழி பின்னர் அச்சு வருகையினாலும் சுதந்தர இந்திய ஆட்சியின் மதச்சுதந்தரமும் கல்வி முறையில் ஏற்பட்ட தோற்றவளர்ச்சி நவீன சிந்தனைகளின் உருவாக்கம் போன்ற காரணிகளால் இலக்கியம் பெரிதும் வளர்ச்சியுற்றது. இக்காலத்தில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்கள்

- சங்க இலக்கியங்கள் கண்டுபிடிக்கப்பட்டதும் அச்சேற்றியதும்
- உரைநடையில் எழுதுவது அறிமுகம்
- புதுக்கவிதை என்னும் புதுப்பாணி தோற்றம் பெற்றது.
- மணிப்பிரவாள நடை ஒழிந்தது.

## சங்க இலக்கியத்தில் சூழல்:

சங்கஇலக்கியத்தில் மனிதன் இயற்கையோடு இணைந்து வாழ்ந்திருக்கிறான். அக்கால கட்டத்தில் மனிதனை செழுமை மழைவளம் இயற்கை வளம் ஆகியவை இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கு வழி அமைத்துக் கொடுத்தன. தற்காலத்தில் இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டு வருவதால் புவி வெப்பமடைதலும் ஆறு ஏரி குளங்கள் போன்றவை சரிசமமாக ஆக்கப்பட்டு, கட்டிடங்களாய் முளைப்பதும் குடிநீர் பிரச்சினையாய் மக்களின் வாழ்க்கை, போராட்டம் நிறைந்ததாக மாறுவதும் சாதாரணமாக நிகழ்கிறது. நிலத்தை அழிப்பதில் சங்ககால மக்கள் செயலாற்றியுள்ள மற்றொரு கூறு அந்தந்த நிலங்களுக்கே உரிய தொழில் சார்ந்த உற்பத்தி பொருட்களில் ஈடுபட்டது தான். இயற்கையை போற்றும் அறச்செயல்பாடே சூழலியல் அறிவியலாக அன்று மலர்ந்து கவனம் பெற்று வருகிறது.

## கால ஓட்டத்தில் தமிழ் அறிஞர்கள்

தமிழின் சிறப்பு அதன் தொன்மையில் மட்டுமன்று அதன் தொடர்ச்சியிலும் உண்டு என்பது அறிஞர் கருத்து தமிழ் வரலாற்றில் பல உயர்வுகளும் தேக்கங்களும் இருப்பது உண்மை. சங்ககால இலக்கியங்களுக்கு பின்பு பிறகடைச் சங்கநூல்கள் பல தோன்றின. அவை நெடுந்தொகை நானூறு குறுந்தொகை நானூறு சிற்றிசை பேரிசை போன்றவையாகும். இது தவிர முற்கால சங்கநூல் பிற்கால சங்கநூல்கள் தோன்றின. சங்கம் மருவிய காலத்தில் அறநீதி நூல்கள் தோன்றின. இந்நூல்களுக்கு ஏற்ப காலம் அமைந்து இருந்து பக்திநெறி வளர்ந்தது. இதையடுத்து காப்பியங்கள் தோன்றின.

பின்னர் வந்த கால கட்டத்தில் வைணவ சமயநூல்கள் சைவசித்தாந்த பண்டார சாத்திரங்கள் தோன்றின. இக்காலத்திற்கு பிறகு சமய இலக்கியங்கள் தோன்றலாயிற்று. அவை கிறித்தவ தமிழ் இலக்கியங்கள் இசுலாமிய தமிழ் இலக்கியங்கள் உலாக்கள் சிற்றிலக்கியங்கள் புராணங்கள் கம்பராமாயணம் ஔவையார் நூல்கள் இலக்கண நூல்கள் நிகண்டுகள் அகராதிகள் எழுதப்பட்டன.

பின்னர் வந்த காலகட்டத்தில் கலைக்களஞ்சியங்கள் தமிழ் அறிவியல் நூல்கள் போன்ற நூல்கள் எழுதப்பட்டன. இந்நூல்கள் மூலம் அக்காலகட்டத்தில் மக்கள் வாழ்ந்த சூழல் அறியப்பட்டது.

## சமய இலக்கியங்கள்

சமய இலக்கியங்கள் பக்தி பெருக்கை எடுத்து உரைப்பவை சமய தத்துவங்களை புலப்படுத்துபவை சமண சமய துறவிகளும் புத்தமத துறவிகளும் மெய்ப்பொருளியலை கூறும் இலக்கிய நூல்களை படைத்தனர்.

## தோன்றுவதற்கான காலச்சூழல்

தமிழகத்தை கி.பி.250 முதல் 600 வரை களப்பிரர் ஆண்டனர். இவர்கள் கர்நாடக தேசத்திலிருந்து வந்து தமிழகத்தை கைப்பற்றினர். 6-ம் நூற்றாண்டின் இறுதியில் சிம்மவிஷ்ணு என்னும் பல்லவனும் பாண்டியன் கடுஞ்சேரனும் களப்பிரரை வெற்றி கொண்டனர். தமிழகத்தில் மன்னராட்சி பல்லவர் கைகளுக்கு மாறியது. இந்நூற்றாண்டில் சமணமதம் தமிழகத்தில் பரவியது. பல்லவர்கள் பல கோயில்களைக் கட்டி சைவமும் வைணவமும் தழைக்க பாடுபட்டனர்.

## பாடு பொருளில் மாற்றம்

சமண பௌத்த சங்கங்களை சேர்ந்தவர்கள் இலக்கண இலக்கியங்களை கற்றுத் தேர்ந்தனர். சமய கருத்துக்களை மையப்படுத்திப் பெருங்காப்பியங்கள் சிறுகாப்பியங்கள் உருவாகின. சமயங்களைப் பரப்ப இலக்கியத்தை கருவியாகக்

கொண்டனர். பாடு பொருள் பக்தி உணர்வாக அமைந்தது. போட்டி போட்டுக் கொண்டு தத்தம் சமய இலக்கியங்களை படைக்கும் நிலை ஏற்பட்டது. சைவ வைணவ சமயங்கள் செல்வாக்குப் பெற்றது. சைவ வைணவ பாடல்கள் மக்களால் பாடப்பட்டன. தமிழ் உணர்ச்சி சமய உணர்ச்சியாக பரிணாமம் பெற்றது எனலாம்.

6-ம் நூற்றாண்டு தமிழிலக்கியங்கள் பக்தியை பாடு பொருளாக கொண்டவை. சமயம் சார்ந்தவை. ஏழாம் நூற்றாண்டு சமணஇலக்கியம் காக்கைபாடினியம் சாந்திபுராணம் என்பனவாம். சைவ இலக்கியங்கள் பன்னிரு திருமுறைகள் பாடப்பட்டு பக்தி வளர்க்கப்பட்டது. வைணவ இலக்கியங்களும் நாலாயிர திவ்விபிரபந்தம் தோன்றியது. இது தவிர இதிகாசங்கள் எழுதப்பட்டது. தனிநூல்கள் பலவும் உருவாயின. 8-ம் நூற்றாண்டிலும் சைவ வைணவ இலக்கியங்களகள் நன்முறையில் வளர்ந்தன.

## முடிவுரை

சோழர் ஆட்சி காலம் சைவ இலக்கியங்களைத் தொகுத்து பாதுகாக்கும் நிலையை தோற்றுவித்தது. இவ்வாறே வைணவ பாசுரங்களும் வைணவ வழியினரால் போற்றப்பட்டது. சமண பௌத்த சமயங்கள் சிதைந்த நிலையில் கிடைத்ததும் செல்வாக்கு குறைந்த சூழலை வெளிப்படுத்தும் வண்ணம் அமைந்தது. வேதநெறியும் அறநெறியும் தமிழ்நாட்டில் அக்காலத்திலேயே கால்கொண்டு விட்டன. வாழ்க்கை நிலைமை வாழ்க்கை வெறுப்பு ஆகியவற்றை இந்திய சமயங்கள் வற்புறுத்துமளவு வேறு முக்கிய சமயங்களில் வற்புறுத்தப்படவில்லை. பாரதியாரின் கவிதைகள் மக்களுக்கு எழுச்சி ஊட்டுவதாக அமைந்தது. இறுதியாக சாதாரண மக்களின் வாழ்க்கை பொருளாகக் கொண்டு இலக்கியஞ் செய்யும் போக்கு காணப்படுகிறது.